பிரஸார் பாரதி
அகில இந்தியவானொலி, சென்னை- 4

19 05 2024 **SUNDAY** 6 30 **PM**

தலைப்புச் செய்திகள்

1. மக்களவைக்கு 5வது கட்டமாக நாளை வாக்குப்பதிவு நடைபெறவுள்ள 49 தொகுதிகளில் அனைத்து முன்னேற்பாட்டுப் பணிகளையும் தேர்தல் ஆணையம் செய்துள்ளது.

2. சேலம் மாவட்டம், ஏற்காட்டிற்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் கூடுதல் பேருந்துகள் இயக்கப்படும் என்று அரசு போக்குவரத்துக்கழகம் அறிவித்துள்ளது

3. கேரள மாநிலம், இடுக்கி மாவட்டத்தில் சிலந்தி ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட முயற்சிக்கும் அம்மாநில அரசின் நடவடிக்கைகளுக்கு எதிர்க்கட்சித் தலைவர் திரு. எடப்பாடி பழனிசாமி கண்டனம் தெரிவித்துள்ளார்.

4. தென்மேற்கு பருவமழை, தெற்கு அந்தமான் மற்றும் அதனை ஒட்டிய கடல்பகுதிகளில் இன்று தொடங்கியுள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் ஹைதராபாத் அணி வெற்றிபெற 215 ரன் என்ற இலக்கை பஞ்சாப் அணி நிர்ணயித்துள்ளது.

>>>>><<<<<

மக்களவைக்கு 5வது கட்டமாக நாளை வாக்குப்பதிவு நடைபெறவுள்ள 6 மாநிலங்கள் மற்றும் இரண்டு யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 49 தொகுதிகளில் அனைத்து முன்னேற்பாட்டுப் பணிகளையும் தேர்தல் ஆணையம் செய்துள்ளது.

உத்தரப்பிரதேசத்தில் 14 தொகுதிகளிலும், மகாராஷ்டிராவில் 13, மேற்குவங்கத்தில் 7, பீஹார் மற்றும் ஒடிசாவில் தலா 5, ஜார்கண்டில் 3, ஜம்மு-கஷ்மீர் மற்றும் லடாக்கில் தலா ஒரு தொகுதியிலும் நாளை வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

இந்த தொகுதிகளில் 94 ஆயிரத்து 732 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டு, 9 லட்சத்து 47 ஆயிரத்திற்கும் கூடுதலான தேர்தல் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

காலை 7 மணிக்கு தொடங்கும் வாக்குப்பதிவு, மாலை 6 மணியுடன் நிறைவடைகிறது.

வாக்குச்சாவடி மையங்களில் வாக்காளர்கள் வாக்களிக்க ஏதுவாக, நிழற்பந்தல், குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள் ஆகியோர் வாக்களிக்க ஏதுவாக சக்கர நாற்காலிகள் மற்றும் சாய்தள வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

100 சதவீத வாக்குப்பதிவை உறுதி செய்யும் வகையில் தேர்தல் ஆணையம் விரிவான ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் செய்துள்ளது.

வாக்குப்பதிவு நடைபெறும் தொகுதிகளில் நிலவும் கடும் வெப்பநிலையை கருத்தில் கொண்டு, வாக்காளர்களுக்கு தேவையான போதிய வசதிகளை ஏற்படுத்தி தருமாறு மாவட்ட தேர்தல் அதிகாரிகள், மாநில நிர்வாகங்களுக்கு தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

கடந்த 4 கட்டங்களாக 379 மக்களவைத் தொகுதிகளுக்கு வாக்குப்பதிவு அமைதியாகவும் சுமுகமாகவும் நடைபெற்றுள்ளது.

இந்நிலையில், ஒடிசா மாநிலத்தில் இரண்டாவது கட்டமாக 35 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு நாளை வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

>>>>><<<<<

மக்களவைக்கு எஞ்சியுள்ள 6வது மற்றும் 7ஆம் கட்ட தேர்தல் நடைபெறும் தொகுதிகளில் பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரச்சாரம் விறுவிறுப்படைந்துள்ளது.

மேற்குவங்க மாநிலம், **Purulia** மக்களவை தொகுதியில் தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி, மக்களவை தேர்தலில் பிஜேபி வெற்றி பெற்று மீண்டும் ஆட்சியமைத்தவுடன், ஊழலில் ஈடுபட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

ஷெல்யூடு மற்றும் பழங்குடியின மக்களின் நலனில் திரிணாமுல் காங்கிரஸ் தலைமையிலான அரசு அக்கறை கொள்ளவில்லை என்று அவர் குறை கூறினார்.

எதிர்க்கட்சி கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி வெற்றிபெற்று ஆட்சியமைத்தால், இடஒதுக்கீட்டை நீக்கி விடுவார்கள் என்று அவர் தெரிவித்தார்.

மத அடிப்படையிலான இடஒதுக்கீட்டு முறைக்கு டாக்டர் அம்பேத்கர் ஆதரவு அளிக்கவில்லை என்று திரு. நரேந்திர மோடி கூறினார்.

ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்த மூத்த தலைவர்களை கைது செய்ய பிஜேபி திட்டமிட்டு வருவதாக அக்கட்சியின் ஒருங்கிணைப்பாளர் திரு. அரவிந்த் கெஜ்ரிவால் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில், இதுபோன்ற நடவடிக்கைகள் மூலம் ஆம் ஆத்மி கட்சியை அழிக்க முயற்சிப்பதாக தெரிவித்தார்.

ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்த தலைவர்களின் வங்கிக் கணக்குகளை முடக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அமலாக்கத்துறை வழக்கறிஞர், நீதிமன்றத்தில் தெரிவித்திருந்ததை திரு. அரவிந்த் கெஜ்ரிவால் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

>>>>><<<<<

சேலம் மாவட்டம், ஏற்காட்டிற்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதன் காரணமாக, இன்று முதல் கூடுதல் பேருந்துகள் இயக்கப்படும் என்று அரசு போக்குவரத்துக்கழகம் தெரிவித்துள்ளது.

கொடைக்கானல் மற்றும் உதகையில் வரும் 22ஆம் தேதிவரை கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதை அடுத்து, சுற்றுலா தலமான ஏற்காட்டிற்கு வரும் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இதனையடுத்து சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக இன்று முதல் 3 தினங்களுக்கு சேலம் அரசு போக்குவரத்துக்கழகம் சார்பில் கூடுதலாக 14 பேருந்துகள் இயக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு மாநிலங்களிலிருந்து வரும் பயணிகளின் வசதிக்காக இம்மாதம் 22ஆம் தேதியிலிருந்து கூடுதலாக 35 பேருந்துகள் இயக்கப்படவுள்ளதாகவும் அரசு போக்குவரத்துக்கழகம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

கேரள மாநிலம், இடுக்கி மாவட்டத்தில் சிலந்தி ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட முயற்சிக்கும் அம்மாநில அரசின் நடவடிக்கைகளுக்கு எதிர்க்கட்சித் தலைவர் திரு. எடப்பாடி பழனிசாமி கண்டனம் தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், அமராவதி அணைக்கு வரும் தண்ணீரை தடுக்கும் வகையில், கேரள அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

அரசியல் ஆதாயங்களுக்காக நதிநீர் தொடர்பான உரிமைகளை நிலைநாட்டுவதில் மாநில அரசு மெத்தனமாக செயல்பட்டு வருவதாகவும் அவர் குறை கூறியுள்ளார்.

தமிழகத்தின் உரிமைகளை நிலைநாட்ட மாநில அரசு சட்டரீதியிலான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று திரு. எடப்பாடி பழனிசாமி கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>><<<<<

நெல் கொள்முதல் விலையை குவிண்டாலுக்கு 3 ஆயிரம் ரூபாயாக நிர்ணயிக்க வேண்டும் என்று பாமக தலைவர் மருத்துவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம், கொள்முதல் செய்யப்படும் நெல்லின் அளவு, கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 10 லட்சம் டன் அளவிற்கு குறைந்துள்ளததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கான காரணங்களை கண்டறிந்து, உரிய நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும் என்று மருத்துவர் அன்புமணி ராமதாஸ் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>><<<<<

தெற்கு அந்தமான் மற்றும் அதனை ஒட்டிய கடல்பகுதிகளில் தென்மேற்கு பருவமழை இன்று தொடங்கியுள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இதனை தெரிவித்தார்.

தென்தமிழக கடலோரப் பகுதிகளில் சூறாவளி காற்று வீச வாய்ப்புள்ளதால் மீனவர்கள், கடலில் மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

மேற்குத்தொடர்ச்சி மலை பகுதிகள் உள்ளிட்ட ஒரு சில பகுதிகளில் கனமழை முதல் அதிகனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ள நிலையில் நெல்லை உள்ளிட்ட தென்மாவட்டங்களுக்கு சிவப்பு நிற எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, மாநில பேரிடர் மீட்புப் படையினர் தயார் நிலையில் உள்ளதாக உதவி ஆணையர் திரு. முத்து கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

மாவட்டச்செய்திகள்

மயிலாடுதுறை மாவட்டம், சித்தர்காடு ஊராட்சியில் மாணவர்களின் திறனை வெளிக்கொண்டு வரும் வகையில், 10 வார கால அமைதி கல்வித் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

தென்காசி மாவட்டம், மேற்குதொடர்ச்சி மலையை ஒட்டிய பகுதிகளில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ள நிலையில், குற்றால அருவிகளில் குளிக்க நாளை மறுநாள் வரை தடை விதிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில் உள்ள ஆகாயகங்கை நீர்வீழ்ச்சியில் நீர்வரத்து அதிகரித்துள்ளதை அடுத்து சுற்றுலாப் பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

விருதுநகர் மாவட்டத்தில் கனமழை எச்சரிக்கையை அடுத்து, 24 மணிநேரமும் இயங்கும் கட்டுப்பாட்டு அறை உள்ளிட்ட பல்வேறு முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை அம்மாவட்ட நிர்வாகம் மேற்கொண்டு வருகிறது.

>>>>><<<<<

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் புலிகள் காப்பகம், தாளவாடி வனச்சரகத்திற்கு உட்பட்ட வனப்பகுதியில் யானையை வேட்டையாடி, தந்தம் கடத்தியது தொடர்பான வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட நபர் ஒருவரை வனத்துறை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் பஞ்சாப் அணிக்கு எதிரான ஆட்டத்தில் 215 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடி வரும் ஹைதராபாத் அணி சற்றுமுன்வரை 11 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 141 ரன் எடுத்தது.

ஹைதராபாதில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த பஞ்சாப் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 214 ரன் எடுத்தது.

மற்றொரு போட்டியில், ராஜஸ்தான் அணி – கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.

>>>>>END<<<<<